பிரக்ஞை விரிவு ஆன்ம விடுதலைக்கு இட்டுச் செல்கின்றது.

ஐயப்ப வழிபாடும், சபரி யாத்திரையும் பக்தர்க்கு அகந்தை நீக்கப் பயிற்சி தருகிறது. ஒவ்வொரு பக்தனையும் ஐயப்பனாகப் பாவித்துப் பழகல், வினயத்துடன் உலகியல் தாரதம்மியம் மறந்த சமபாவத்துடன் வணங்கல் என்பவை ஆன்ம நலம் அருளும் அரிய பண்புகள். இப்பண்புகளில் ஆன்மீகப் பயிற்சி இயல்பாகவும், சுலபமாகவும் அமைகிறது.

## அச்சங்கோயில்

''அச்சங்கோயில் அரசே'' என்பது சரணவிளி. தர்ம சாஸ்தாவின் முக்கியமான கோயில்களில் ஒன்று. செங்கோட்டையிலிருந்து சுமார் 20 மைல் மேற்கில் உள்ளது இத்திருத்தலம். பாலக்காட்டுக்கு அருகில் கோஷ்டேஸ்வரபதம் என்னுமிடத்தில் 'கிராதா சாஸ்தா' தரிசனம் கிடைத்தது என்றும், அதன் பொருட்டு எழுப்பிய ஆலயம் இது என்றும் ஐதீகம். கொல்ல வருடம் 1106-தை 12-ஆம் தேதி இக் கோயிலின் புனர் பிரதிஷ்டை நடந்தது. சின் முத்திரை தாங்கிய சாஸ்தாவின் வலக்கையில் உள்ள சந்தனமும், தீர்த்தமும் பாம்பின் நஞ்சினை முறிக்கும் அருமருந்தாகப் போற்றப்படுகிறது. நடை திறப்பு - காலை: 5.30 முதல் 12.00 வரை; மாலை: 5.00 முதல் இரவு 8.00 மணி வரை.

## அப்பாச்சி மேடு

பம்பை நதி தீரத்திலிருந்து புறப்படும் ஐயப்பன் மார் நீலிமலை வருவர். நீலிமலை ஏற்றம் கடினமானது. அடுத்து வருவது அப்பாச்சி மேடு. அது அச்சம் தருவது. அவ்வழியின் இரு புறமும் அமைந்த பள்ளங்களுக்கு அப்பாச்சிக் குழி, இப்பாச்சிக் குழி என்று பெயர். இருபுறப் பள்ளங்களும் தீய சக்திகளின் இருப்பிடங்கள் எனக் கருதி, அங்கு வாழும் துர்த்தேவதைகளைத் திருப்தி செய்தல் பொருட்டு அரிசி மாவு உருண்டைகளை வீசி எறிந்து வழிபாடு செய்வர். இவ்வழியினைக் கடந்தால் வருவது சபரி பீடம் என்னும் சமதரை.

## அரசுமுடிக்கோட்டை

இரும்புன்னிக் கரையில் காடு தொடங்குகிறது. கோட்டபாடி என்னுமிடத்திலிருந்து ஐயப்பனின் பூங்காவனம் விரிகிறது. இதன் மூன்றாவது கிலோமீட்டரில் அரசுமுடிக்கோட்டை உள்ளது. இங்கு பரத்தோடு எனும் நீரோடையில் நீராடி இளைப்பாறலாம். ஐயப்பனும் அவன் வீரர்களும் தங்கி ஓய்வெடுத்த இடம் இது என்பது ஐதீகம்.

## அவதாரம்

அவதாரம் என்னும் சொல்லுக்கு 'இறங்கி வருதல்' என்பது பொருள். ஆன்ம நலம் பேணும் முயற்சியில் அவதாரம் பக்தனின் உய்வுக்கு மிகவும் உதவுகின்றது. அவதார நோக்கம், பொதுவாக, அதர்மத்தை ஒடுக்கித் தர்மத்தை நிலை பெறுத்தலாகும். தர்மசாஸ்தாவின் அவதாரம் புராணத்திலும், நாட்டுப்புறப் பாடலிலும் வழங்கப்பட்டுப் பக்தர்கள் உள்ளத்தில் செழுமை பெற்றது. அதுவே இன்று சத்தியத்தின் உயிர்த் துடிப்புடன் ஓர் ஆன்மீகச் செயல்பாடாகக் கேரளம், தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் நன்கு பரவி வளர்கின்றது. பாற்கடலின் நஞ்சினைக் கருணை வயப்பட்டு அருந்திய பெருமானுக்கும், அப் பாற்கடலின் அமுதினைத் தரும் நெறி நின்று விநியோகம் செய்த பெருமாளுக்கும் ஏற்பட்ட இசைவில் பிறந்த இனிமையே ஹரிஹரசுதனாகிய ஐயப்பன். மகிஷியை அழிக்கும் அவதார நோக்கத்தினை எடுத்துரைத்துப் பந்தள நாட்டு அரசன் ராஜசேகரனுக்கு மகனாக வளருமாறு பணித்தார் சிவபெருமான். தர்ம சாஸ்தாவும் அதன் பொருட்டுப் பம்பைக் கரையில் குழந்தையாகக் கிடந்தார். அக்குழந்தையை எடுத்து வளர்க்கும் பேறு பந்தள அரசனுக்குக் கிட்டியது.

## அழுதாநதி

பம்பாநதியின் கிளை நதி. காளக்கட்டியிலிருந்து இரண்டரைக் கிலோ மீட்டர் தூரத்தில் வாழைத் தோட்டத்தை ஒட்டி ஓடுகிறது. மணிகண்டனால் தூக்கி எறியப்பட்ட மகிஷியின் உடல் இந் நதிக்கரையில் விழுந்ததாக ஐதீகம். நிர்மலமான அழுதை நதிக்கரையில் ஓர் இரவு தங்கி ஓய்வெடுக்கும் ஐயப்ப பக்தர்கள் மறுநாள் நதியில் நீராடி பூஜைக்குப்பின் உணவருந்தி அழுதை மேடு நோக்கிச் செல்வர். நீராடும் போது ஒரு சிறு கல்லும் எடுத்துக் கொள்வர். அழுதா மேட்டின் அண்மையிலிருக்கும் கல்லிடுங்குன்றில் இக்கல்லினை இடுவர்.


ஐயன் சன்னிதியில் கொடியேற்று வைபவம்

## அழுதாமேடு

ஐயப்ப பக்தர்கள் அதிகாலையில் அழுதா நதியில் நீராடிச் சிறு கல் ஒன்றினை எடுத்துப் பூஜைக்குப் பின் உணவருந்தி, சுமார் மூன்று கிலோமீட்டர் நடந்து அழுதாமேடு என்னும் குன்றம் ஏறுவர். அதன் அண்மையில் உள்ள இஞ்சிப்பாறைக் கோட்டையின் முன்புறம் உள்ள கல்லிடுங்குன்றில் அழுதா நதியில் எடுத்து வந்த கல்லினை இடுவர்.

அழுதாமேடு அழ வைத்து விடும். சுவாமி ஐயப்பன் அங்கு நடந்து சென்ற மனக்காட்சி பக்தர்கள் நெஞ்சை நெகிழச் செய்யும். ''ஏந்தி விடய்யா...தூக்கி விடய்யா'' எனும் கோஷம்